தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **homebushtsch@gmail.com**

ஆண்டிறுதிப் பரீட்சை 2025

ஆண்டு: 7 திகதி: 29.11.2025

நேரம்: 02:30 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி மஞ்சு விஜயகுமார்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	வினா புள்ளி	பெற்ற புள்ளி
வினா 1	15	
வினா 2	15	
வினா 3	15	
வினா 4	20	
வினா 5	15	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

– BLANK PAGE –

வினா இல	1	புள்ளிகள்	15	பக்கம்	3

நீர் கேட்ட உரையாடலில் இருந்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

கேட்டுக் கிரகித்தல்

இல	வினாக்கள்	இங்கே குறிப்புகளை எழுதுக
01	திருவள்ளுவர் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தார் என்று கூறப்படுகிறது?	
02	அவர் எழுதிய நூலின் பெயர் என்ன?	
03	திருக்குறளில் மொத்தம் எத்தனை குறள்கள் உள்ளன?	
04	திருக்குறள் எத்தனை பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது?	
05	திருவள்ளுவர் கூறியுள்ள நல்லொழுக்கங்கள் எவை?	

வினா இல	2	புள்ளிகள்	15	பக்கம்	4

கீழே கொடுக்கப்பட்டுள்ள அழைப்பிதழை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை எழுதுக.

நடத்தும் 'கம்பன் விழா - 2025'





அனுமதி இலவசம்

நாள்: ஐப்பசி 10, 11, 12 - 2025

நேரம்: பி.ப. 4 மணிக்கு

மேன்மைமிகு பரதநாட்டியக் கலைஞர்,

மீனாட்சி ஸ்ரீனிவாசன் அவர்கள் (தமிழ்நாடு)

பரதநாட்டிய நிகழ்ச்சி

இடம்: Redgum Function Centre, Wentworthville

வழக்காடு மன்றம்

நீதிபதி: முனைவர் பாரதி கிருஸ்ணகுமார்

வழக்கு: குற்றக்கூண்டில் கானகச்சீதை

1. ‘இலக்கிய நிகழ்வுகள்’ யாரால் நடத்தப்பட்டது?

_____

2. இந்நிகழ்வுகள் எங்கு? எந்த மாதம் எந்த திகதிகளில் இடம் பெற்றது?

_____

_____

_____

3. இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பரதநாட்டியக் கலைஞர் யார்?

_____

4. இங்கு இடம்பெற உள்ள வழக்காடு மன்றத்தின் வழக்கு என்ன? இதன் நீதிபதி யார்?

_____

5. இலக்கிய நிகழ்வுக்கு அனுமதிக்கட்டணம் அறவிடுகிறார்களா?

_____

வினா இல	3	புள்ளிகள்	15	பக்கம்	6

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக

இந்தியாவின் ஏவுகணை நாயகன்

டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் 1931ம் ஆண்டு தமிழ்நாட்டின் இராமேஸ்வரம் என்ற கடற்கரை கிராமத்தில் பிறந்தார். அவரது தந்தை ஒரு சாதாரண படகு ஓட்டுநர். சிறுவயதிலிருந்தே அவர் அறிவியலிலும் கல்வியிலும் ஆர்வம் கொண்டவர். பொருளாதார வசதிகள் இல்லாததால், அவர் கடுமையாக உழைத்து உயர்கல்வியை முடித்தார். பின்னர் அவர் இந்தியாவின் முக்கிய விஞ்ஞானியாக உருவாகி, விண்வெளி மற்றும் ஏவுகணை திட்டங்களில் முக்கிய பங்கு வகித்தார். அதனால் அவர் "இந்தியாவின் ஏவுகணை நாயகன்" (Missile Man of India) என அழைக்கப்பட்டார்.

அவர் 2002 ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை 11வது குடியரசுத் தலைவராக பணியாற்றினார். குடியரசுத் தலைவராக இருந்தபோதும், அவர் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார். மாணவர்களிடம் கலாம் அவர்களுக்கு பெரும் அன்பு இருந்தது. அவர்கள் கனவு காணவும், கடினமாக உழைக்கவும் அவர் எப்போதும் ஊக்குவித்தார். "சிறந்த கனவுகள் சிறந்த மனிதர்களை உருவாக்கும்" என்பது அப்துல் கலாமின் ஒரு உந்துதல் வாசகமாகும்.

2015 ஆம் ஆண்டு அவர் மாணவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும்போது உயிரிழந்தார். அவரது வாழ்க்கை இன்றும் அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது.

1. அப்துல் கலாம் அவர்கள் எப்போது, எங்கு பிறந்தார்?

    1. ----------
    2. ----------

2. அவரை ஏன் '"இந்தியாவின் ஏவுகணை நாயகன்" என்று அழைக்கின்றனர்?

    ----

3. அவர் எந்த ஆண்டுகளில் குடியரத் தலைவராக இருந்தார்?

    ----

4. மாணவர்களிடம் கலாம் அவர்கள் எதனை ஊக்குவித்தார்?

    ----

5. அப்துல் கலாம் அவர்கள் மாணவர்களாகிய உங்களுக்கு கூறிச்சென்ற உந்துதல் வாசகம் என்ன?

வினா இல	4	புள்ளிகள்	20	பக்கம்	7

அவுஸ்திரேலியா வரவிருக்கும் உமது உறவினர் ஒருவருக்கு இங்கு பார்த்து மகிழக்கூடிய இடங்களை விபரித்து 70 சொற்களுக்கு குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

எமது தமிழ்க் கல்வி நிலையத்தில் நடைபெற்ற வாணிவிழா பற்றி விபரித்து 70 சொற்களுக்கு குறையாமல் உமது நண்பருக்குக் கடிதம் எழுதுக.

வினா இல	5	புள்ளிகள்	15	பக்கம்	8

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக

யூக்கலிப்டஸ் மரம்

மக்களுக்கு மிகவும் பயன்படும் மரங்களில் யூக்கலிப்டஸ் மரமும் ஒன்று. இம்மரம் அவுஸ்த்திரேலியா கண்டத்தில்தான் தொடக்கத்தில் காணப்பட்டது. அவுஸ்த்திரேலியாவில் கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் இந்த மரத்தைப் பற்றி மற்ற நாட்டினரும் அறிந்தனர். இன்று இது உலகின் பல்வேறு நாடுகளிலும் பயிரிடப்படும் பயனுள்ள மரமாகத் திகழ்கிறது.

அவுஸ்ரேலியர்கள் இதைக் கோந்து மரம் என்று அழைக்கிறார்கள். இந்த மரத்தில் நூற்றுக்கணக்கான வகைகள் உண்டு. சில வகை யூக்கலிப்படஸ் மரங்கள் அடர்ந்து தழைத்துப் படரும். வேறு சில மரங்கள் நேராகவும் உயரமாகவும் வளரும். இக்கன்றுகளை நட்டால் ஓர் ஆண்டில் சுமார் நான்கு மீட்டர் உயரம் வளர்ந்துவிடும். இம்மரம் செழித்து வளர்வதற்கு மிகுதியான தண்ணீர் வேண்டும். ஆகையால், இதைப் பெரும்பாலும் சதுப்பு நிலங்களிலுள்ள நீரை இது எடுத்துக்கொண்டு விடுவதால் மலேரியாவை ஒழிப்பதற்கு இம்மரங்கள் பெருமளவுக்குத் துணை புரிகின்றன.

இம்மரத்தின் இலைகளிலிருந்து இளம் மஞ்சள் வண்ணத்தில் ஒரு வகை எண்ணெய் கிடைக்கிறது. இதுவே நீலகிரித் தைலம் எனப்படும் தலைவலித் தைலமாகும். இந்தியாவில் ஆங்கிலேயர்கள் முதன்முதலில் நீலகிரி மலையில் இம்மரங்கள் நட்டுப் பயிர் செய்தனர். எனவே, இதன் இலைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய்க்கு நீலகிரித்தைலம் என்னும் பெயர் உண்டாயிற்று. மூக்கடைப்பு, தசைப்பிடிப்பு, உடல் நோவு போன்ற பல நோய்களுக்கு இந்த எண்ணெய் வியக்கத்தக்க பலனைத் தரும் மருந்தாகப் பயன்படுகிறது.

1. யூக்கலிப்டஸ் மரம் முதன் முதலில் எங்கு காணப்பட்டது?

---

2. இம்மரம் நன்றாக வளர்வதற்குத் தேவையானது எது?

---

3. மலேரியாவை ஒழிக்க இம்மரங்கள் எவ்வாறு உதவுகின்றன?

---

4. யூக்கலிப்டஸ் எண்ணெய்க்கு நீலகிரித் தைலம் என்னும் பெயர் உண்டாகக் காரணம் என்ன?

5.‘**Eucalyptus trees’ iconic Australian trees** ‘ இந்த தலைப்பை வைத்து நீங்கள் அறிந்தவற்றை எழுதுக

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	10

பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 125 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.

1. நீங்கள் விரும்பும் பெரியார்
2. புலம் பெயர்ந்த தமிழர்களும் தமிழ்மொழியும்
3. புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் ஊடகங்களின் பங்கு
4. தமிழ் மக்கள் விரும்பி உண்ணும் பாரம்பரிய உணவு